<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2023–ம் ஆண்டு ஜூன் மாதம் 03–ம் நாள் சனிக் கிழமை

<u>இடைநிலை மனுஎண்.2/2022</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.173/2019</u>

<u>(பழைய அ.வ. எண்.560/2019)</u>

ஜெய்னுலாப்தீன் ..... மனுதாரர்/ வாதி

/ எதிர் /

1. தமிழ்நாடு அரசு அதன் சார்பாக
   மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்.
2. வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர்.
3. வட்டாட்சியர், வேப்பந்தட்டை.
4. விஜயா .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 28.04.2023–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 4ம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது மனுதாரர்கள் /வாதிகளால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் படி மனுவில் கண்டவாறு வழக்குரையை திருத்தம் செய்ய மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் இந்த வழக்கில் வேறொரு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றும், பின்னர் வழக்கை நடத்த தற்போதைய வழக்கறிஞரை நிராகரித்தேன் என்றும், "வடபுறம் கிழமேலாக 1.6 மீட்டர், தென்புறம் கிழமேலாக 3.6 மீட்டர், மேல்புறம் தென்வடலாக 3.2 மீட்டர் மற்றும் கீழ்புறம் தென்வடலாக 4.2 மீட்டர், மொத்தம் 9.62 சதுர மீட்டர்.(105 சதுர அடி)" என்று தவறாகக் குறிப்பிடப்பட்ட தாவா சொத்தின் அளவு " வடபுறம் கிழமேலாக 1.6 மீட்டர், தென்புறம் கிழமேலாக 3.8 மீட்டர், மேல்புறம்

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:41:46 +0530

தென்வடலாக 3.2 மீட்டர் மற்றும் கீழ்புறம் தென்வடலாக 4.2 மீட்டர் மொத்தம் 10 சதுர மீட்டர்" இது எழுத்தர் பிழை மற்றும் கவனக்குறைவாக செய்யப்பட்டது என்றும், ஆனால் அது தனக்கு தெரியாது என்றும், தாவா சொத்து விவரம் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற நோக்கத்துடனும், மேலும் மேற்கூறிய வழக்கில், வழக்கறிஞர்/ஆணையர் வழக்குச் சொத்தை ஆய்வு செய்து, வழக்குச் சொத்தைப் பற்றிய தனது அறிக்கையையும் திட்டத்தையும் தாக்கல் செய்தார் என்றும், அதே போல வழக்குச் சொத்தின் அளவும் மேலே கூறப்பட்டபடி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இத்தருணத்தில், எதிர்காலச் சிக்கலைத் தவிர்க்கவும், இந்த வழக்கின் சிறந்த தீர்ப்புக்காகவும், வழக்குச் சொத்தின் அளவை உண்மையான நிலைப்பாட்டின்படியும், வழக்கறிஞர்/ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையின் அடிப்படையிலும் திருத்தம் செய்வது நியாயமானது மற்றும் அவசியமானது என்றும், மேற்படி தனது மனுவில் ஏற்பட்ட தவறுகளை திருத்தம் செய்து ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே மனுவை அனுமதிக்கவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>4 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், 14.10.2022 ம் தேதி வா.சா.1 அளித்த தனது குறுக்கு விசாரணையில்," நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கை மீது நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், மேற்படி ஆணையர் அறிக்கைக்கு பின்னிட்டு தான் வழக்கு சொத்தின் சர்வே எண்.462/34 என்பதை 462/34 ஏ என மாற்றம் செய்ய என் தரப்பில் 31.10.2018 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய வழக்குரைப்படி தாவா சொத்தின் அளவை வடபுறம் கிழமேலாக 1.6 மீட்டர் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தென்புறம் கிழமேலாக 3.6 மீட்டர் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேல்புறம் தென்வடல் 3.2 மீட்டர் எனவும், கீழ்புறம் தென்வடல் 4.2 மீட்டர் எனவும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்" என்றும், "நீ.ம.சா.ஆ.2 மற்றும் நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு சொத்தானது வடபுறம் கிழமேலாக 3.2 என்றும் தென்புறம் கிழமேலாக 4.2 என்றும் மேல்புறம் தென்வடலாக 3.8 என்றும், கீழ்புறம் தென்வடலாக 1.6 என்றும் காட்டியுள்ளார் என்றால் சரிதான்"

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:42:00 +0530

என்றும் ஆணையர் வடைடத்தை Sq.ft or Sq.meters அளவில் சரியாக அளவீடு செய்யவில்லை என்றும், " மேற்படி பட்டா கொடுத்தபோதே தாவா சொத்தான 105 சதுரடி தனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் நத்தம் சர்வே எண்.462/36 மற்றும் 462/37 ஆகியவற்றில் எனக்கும், என் சகோதரர்களுக்கும் கொடுத்திருக்க வேண்டும். மாறாக மேற்படி 105 சதுரடி தாவா சொத்து 4 ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்" என்றும், மனுதாரரின் வழக்கு சொத்தை 3.2 மீ. வடபுரம் கிழமேலாக, 4.2 மீ. தெற்கில் கிழமேலாக, 3.8 மீ. வடபுரம் தென்மேலாகவும், 1.6 மீ. கிழக்கில் வடதெற்கில் அதுவும் PW1 இன் குறுக்கு விசாரணைக்குப் பிறகு முக்கிய சேர்க்கைகளை நிராகரிப்பதற்கும், மேற்கண்ட முக்கிய சேர்க்கைகளை ரத்து செய்வதற்கும், தற்போதைய திருத்த மனுவை தாக்கல் செய்வதில் மனுதாரரின் செயல் நிராகரிக்கப்படவேண்டும் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டால், PW1 இன் முக்கிய சேர்க்கைகள் பிரதிவாதியின் விஷயத்தில் ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும் என்றும், 25.07.2015 அன்று தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை மற்றும் திட்டத்தின் படி மனுவினை திருத்த 28.11.2022 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், மேலும், தற்போதைய மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டு 12 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளது என்றும், மேற்கண்ட வழக்கு 2010 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றும், வழக்குடன் மனுதாரர்/வாதி இடைக்காலத் தடை கோரி ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதத்தில் காணப்படுவது IA.1607/2010 ல் உள்ள தடை உத்தரவு மனுவில் மீண்டும் மீண்டும் வருகிறது என்றும், பின்னிட்டு மனுதாரர்/வாதி IA.1611/2010 ல் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்கண்ட ஆணையர், சர்வேயருடன் 25.07.2015 அன்று வழக்குச் சொத்தை ஆய்வு செய்தும் அளவீடு செய்தும், வழக்கறிஞர் /ஆணையர் தனது அறிக்கையையும், திட்டத்தையும் தாக்கல் செய்தார் என்றும், ஆணையர் மனுவிலும் தாவா சொத்தின் சர்வே எண் SF.462/34 என்ற விவரத்துடன் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்துக்கான வாதத்தில் காணப்பட்ட அளவைத் திருத்துவதற்கு மனுதாரர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதே வழக்கறிஞர்/ஆணையர் 04.09.2012 அன்று வழக்குச் சொத்தை ஆய்வு செய்து அளவீடு செய்துள்ளார் என்பதும், ஆனால் அவருக்கு நன்கு தெரிந்த காரணங்களுக்காக அவர் தனது அறிக்கை மற்றும் திட்டத்தை தாக்கல் செய்யவில்லை

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:42:10 +0530

என்றும், அதன்பிறகு சர்வேயருடன் வழக்கறிஞர்/ஆணையர் 30.08.2014 அன்று வழக்குச் சொத்தை ஆய்வு செய்து அளவீடு செய்த பிறகு, அவர் தனது அறிக்கையையும், திட்டத்தையும் வழக்குச் சொத்தாகக் கொடுக்கப்பட்ட ஆணையர் விண்ணப்பத்தின் அடிப்படையில் SF.462/34 என எந்த வகை அளவீடுகளும் இல்லாமல் கூறப்படும் புள்ளிவிவரங்களுடன் தாக்கல் செய்தார் என்றும், திருத்த விண்ணப்பத்தை தாக்கல் செய்தது 10 ஆண்டுகளுக்குப் பிறகும், மனுதாரர்/வாதியால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 12 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தனது அறிக்கை மற்றும் திட்டத்தை தாக்கல் செய்த பிறகு, அதைக் குறிப்பிடத் தேவையில்லை. மனுதாரர் மனுவினை ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்கல் செய்வது தாமதப்படுத்தும் நோக்கத்திலே என்றும், மனுதாரர்/வாதி IA.231/2018 ல் திருத்த மனுவுடன் சர்வே எண்ணை திருத்த முன்வந்ததாகவும், பின்பு அதே மனுதாரர் IA.3/2021 ல் மற்றொரு மனுவுடன் பதிவு செய்யப்படாத ஒப்பந்தத்தைக் குறிக்க முன்வந்துள்ளார் என்றும், இது மாண்புமிகு நீதிமன்றம் மேற்கண்ட மனுவினை அனுமதித்துள்ளது. மேற்குறிப்பிட்ட பதிவுசெய்யப்படாத ஆவணத்தை, அவரது உத்தரவின் மூலம் dt.08.08.2022–க்கு இணையாகக் குறிக்கலாம். அதைத் தொடர்ந்து 14.10.2022 அன்று மனுதாரர் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார், அதுவும் ஒரு பகுதியாக இந்த பிரதிவாதி/4 வது பிரதிவாதியின் வழக்கறிஞரின் PW1 குறுக்கு விசாரணை முடிக்கப்படவில்லை. PW1 இன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக, மேற்கண்ட வழக்கு 11.11.2022 அன்று 14.10.2022 முதல் பதிவு செய்யப்பட்டது. 11.11.2022 அன்று மட்டுமே மனுதாரர் PW1 இல்லாததால், PW1 ஆஜராக மற்றும் குறுக்கு விசாரணைக்காக, மேற்கண்ட வழக்கு 28.11.2022 அன்று போடப்பட்டது என்றும், எனவே மாண்புமிகு நீதிமன்றம் எதிர்மனுதாரர்/4 வது பிரதிவாதியின் முன்மாதிரியான செலவுகளுடன் மேற்கண்ட மனுவினை நிராகரித்தும் மற்றும் மனுதாரருக்கு ஆஜராவதற்கு தகுந்த வழிகாட்டுதல் மற்றும் PW1–ஐ மேலும் குறுக்கு விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:42:23 +0530

6. தீர்வு

அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொருத்து விளம்புகைக்காவும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் வழக்கு சொத்தில் நான்கு எல்லைகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அது தட்டச்சு பிழையால் ஏற்பட்டது என்றும், அது குறித்து தனக்கு தற்போது தான் தெரிய வந்தது என்றும், எனவே நான்கு எல்லைகளை மனுவில் கண்டபடி திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளதை ஆராய்கையில், இது குறித்து உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 ஆனது வழக்குரையை திருத்துவது குறித்து கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது [17. **Amendment of pleadings**– The Court may at any stage of the proceedings allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real questions in controversy between the parties:

Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the Court comes to the conclusion that inspite of due diligence, the party could not have raised the matter before the commencement of trial.].

7) மேற்படி சட்ட உட்கூறுகளை கருத்தில் கொண்டு ஆராய்கையில், வழக்குரை திருத்த மனுவானது வழக்கு விசாரணை தொடங்கிய பின்னிட்டு தாக்கல் செய்யப்படும் போது அம்மனுவில் கோரியுள்ள திருத்தம் குறித்து வழக்கு விசாரணைக்கு முன்பாகவே தரப்பினரால் போனதுமான காரணங்களால் எடுத்துரைக்கப்படவில்லை என்பது குறித்து தளரா ஊக்கத்துடன் நீதிமன்றம் முடிவுக்கு வந்தால் ஒழிய வழக்கு விசாரணைக்கு பின்னிட்ட வழக்குரை திருத்த மனுவினை அனுமதிக்ககூடாது என்று கூறியுள்ளதை அறியமுடிகிறது. இதனை கருத்தில் கொண்டு இவ்வழக்கின் சங்கதிகளை ஆராய்கையில், இதற்கு முன்பாகவே இது மனுதாரரால் இ.ம.எண்.231/2018, 31.01.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், அதில் தாவா சொத்திற்குரிய சர்வே எண்ணை திருத்தம் செய்ய வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிற நிலையில், அப்போது வழக்கு சொத்தின் நான்கு எல்லைகளையும் திருத்த வேண்டி மனுதாரர் கோராதது மனுதாரர் தன் வழக்கின் மீது உரிய அக்கறையின்றி இருந்து வந்துள்ளார் என்பதை அனுமானிக்க தோன்றுகிறது.

S P PARVADHRAJ ARUMUGAM

Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:42:43 +0530

8) மேலும் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரால் 2017 ம் ஆண்டிலேயே வழக்கு சொத்து குறித்த இயற்கை தன்மை குறித்து அளவுகளுடன் அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் அப்போதே வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் குறித்து திருத்தத்திற்கான மனுவை மனுதாரர் தாக்கல் செய்திருக்கலாம் என்ற நிலையில், மிக காலம் கடந்து வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) மேலும் அசல் வழக்கில் வாதி வா.சா.1—ஆக 27.01.2021 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளதும், பின்னிட்டு 14.10.2022 ம் தேதி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதும், மேற்படி குறுக்கு விசாரணையில், வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டு வாதியாகிய வா.சா.1—ஆல் பதில் அளிக்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கையில் மனுதாரர் போதுமான வாய்பிருந்தும் வழக்கு விசாரணைக்கு முன்பாகவே மனுவில் கோரியுள்ள வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் திருத்தம் குறித்து மனு செய்து கொள்ளாமல் பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் குறித்து வாய்மொழி சாட்சியம் அளித்துவிட்ட நிலையில், குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துவிட்டதை இட்டு நிரப்புவதற்காக (Fill up the lacuna) மட்டுமே மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதி இம்மனுவை அனுமதிப்பது எதிர்மனுமாரர்/பிரதிவாதிகளுக்கு ஈடுசெய்ய முடியா இழப்பு ஏற்படும் என்பதாகவே இந்நீதிமன்றம் கருதியும், இது குறித்து மனுதாரர் தரப்பில் தாக்கல செய்யப்பட்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய Mohinder Kumar Mehra vs Roop Rani Mehra, CIVIL APPEAL NO.19977 OF 2017 (Arising out of SLP (C) No.26695/2017) dated:11.12.2017 என்ற முன்தீர்ப்புரையில் உள்ள வழக்கின் சங்கதிகளை ஆராயும் போது அவ்வழக்கில் கட்டளை 6 விதி 17 ன் கீழான வழக்குரை திருத்த மனுவானது வழக்கு விசாரணைக்கு முன்பாக தாக்கல் செய்துள்ளதால் அதனை கருத்தில் கொண்டு கீழமை நீதிமன்றம் ரத்து செய்து பிறப்பித்த உத்தரவை தள்ளுபடி செய்து வழக்குரை திருத்த மனுவை அனுமதித்து உத்தரவு அளித்துள்ளது முன்தீர்ப்புரையின் 21 வது பக்கத்தில், "Taking into overall consideration of the facts of the present case and specially the fact that

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:42:52 +0530

evidence by the parties was led after the filing of the amendment application, we are of the view that justice could have been served in allowing the amendment application. We thus allow the appeal and set aside the order of the High Court as well as the order of the Additional District Judge." என்று குறிப்பிட்டு கூறியுள்ளது. மாறாக இவ்வழக்கில் மேற்கண்ட விவாதத்தின்படி வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி முன்தீர்ப்புரையின் சங்கதிகள் இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தி வரவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதியும், மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று கருதியும், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023–ம் ஆண்டு ஜூன் மாதம் 03–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:43:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Date: 2023.06.03 17:43:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.